
C.I.D.லாரன்ஸ்
துப்பறியும்
காணமல்போன
கடல்!
ரூ. 2/-
லயன்
காமிக்ஸ்


லயன் காமிக்ஸின்
முதலாவது பிறந்த நாளைக் கொண்டாடும் வகையில்
ஜூலை 1-ல் வருகிறது
ஆண்டு மலர்!
129ம் பக்கம்




## ரூ. 50/- பரிசு!

### முதலாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கவிருக்கும்
### லயன் காமிக்ஸைப் பற்றி -

அதன் குறைகளைப் பற்றி - நிறைகளைப் பற்றி - கதா பாத்திரங்களைப் பற்றி, கதைகளைப் பற்றி, சித்திரங்களைப் பற்றி, வளர்ச்சியைப் பற்றி, உங்களுக்கு என்ன தோன்றுகிறதோ, அதை எழுதி அனுப்புங்கள். **சிறப்பான விமர்சனத்திற்கு ரூ 50/- பரிசு! விமர்சனங்களை அனுப்பும் பொழுது உங்கள் புகைப்படத்தையும் இணைத்து அனுப்புங்கள்!**

பரிசு பெறுகின்றவரின் விமர்சனமும், புகைப்படமும், "ஆண்டு மலரில்" பிரசுரிக்கப்படும்!

- ஆசிரியர்.


C.I.D. லாரன்ஸ் துப்பறியும்
காணமல்போன கடல்!
சர்வ தேச அளவிலான சமூக விரோத செயல்களில் ஈடுபட்டு, மனித சமுதாயத்தின் பாதுகாப்புக்கு ஊறு விளைவித்து, அதன் மூலம் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முயன்று வந்த அ. கொ. தீ. (அழிவு, கொள்ளை, தீமை) கழகத்தினரால் சிறையிலிருந்து மீட்கப்பட்ட கிங் கோப்ரா என்னும் துஷ்டனை தேடிக் கண்டுபிடிக்கும் பணி ஐ நா. உளவுத்துறையைச் சார்ந்த இரட்டை உளவாளிகளான லாரன்ஸ் - டேவிட் வசம் ஒப்படைக்கப்பட்டது.
இதற்கிடையே, கார்ன்வாலிலிருந்த ஒரு பழைய கோட்டையை நோக்கி காரில் விரைந்து கொண்டிருந்தனர் அ. கொ. தீ. கழகத்தினர் - கிங் கோப்ராவோடு !
அ. கொ. தீ. கழக தலைவர்கள் உன்னைச் சந்திக்க இங்கே காத்துக் கொண்டிருக்கிறார்கள்... !

# அத்தியாயம் 1 : கொலை முயற்சி!







வித்தியாசமான அந்த உருவம் ஒன்றும் பேசாமல் இருக்கையில் அமர்ந்தது.
ஈடு இணையற்ற பயங்கரவாதிகள் என்று பெயர் வாங்கியவர்கள், நாங்கள்.. இந்த உலகை எப்படி அடிமைப்படுத்தலாம் - அதற்கு நாம் கையாள வேண்டிய உபாயம் என்ன என்பது போன்றவிபரங்களை நாங்கள் திருப்தியடையும் வகையில் நீ எடுத்துரைத்தால் இந்தக் கழகத்தின் தலைமைப் பதவியை உனக்குத் தர உத்தேசித்துள்ளோம்.
தன் பெயருக்கேற்ப பாம்பு சீறுவது போன்ற மாறுபட்ட குரலில் பதிலளிக்கத் தொடங்கினான் கிங் கோப்ரா..
சிறையில் அடைபட்டுக் கிடந்த நாட்களில் இந்த உலகின் ஆதிக்கத்தை கைப்பற்ற ஆறு வகையான உபாயங்களை திட்டமிட்டு வைத்துள்ளேன்.. உங்களுடைய முன்மொழியை நான் ஏற்றுக் கொள்கிறேன்.. ஆனால் -
ம்.. மேலே சொல் ;
முதலில் அ. கொ. தீ கழகத்தின் பரம வைரிகளான லாரன்ஸ் - டேவிட் இருவரையும் ஒழித்துக் கட்டியாக வேண்டும்.. அந்த வேலையை நானே என்னுடைய வழிமுறையை பின்பற்றி செய்து முடிப்பேன் !



இதற்கிடையே, இலண்டனில், தேவையான ஆலோசனைகளையும் விபரங்களையும் சேகரித்துக் கொண்டு தலைமையகத்திலிருந்து இருப்பிடம் நோக்கி போய்க் கொண்டிருந்தனர் லாரன்ஸும் டேவிட்டும்.
எப்படியாவது கிங் கோப்ராவைக் கண்டுபிடித்து, உயிருடனோ பிணமாகவோ கொண்டு வந்து சேர்க்கும்படி நமக்கு உத்தரவு ! கஷ்டமான காரியம்தான் ! எங்கே என்று தேடுவது - அந்த அயோக்கிய ராஸ்கலை !
அன்றிரவு - லாரன்ஸும் டேவிட்டும் தங்கியிருந்த குடியிருப்பு பகுதி அருகே ஒரு சாக்கடை திறப்பின் வழியே வெளியேறியது ஒரு கரிய உருவம்
அவனோ அ. கொ. தீ. கழகத்தினரோ முதலில் தங்களை வெளிப்படுத்திக் கொள்ளட்டும்.. அதுவரை அலட்டிக் கொள்ளாமல் இறுகிப் போய் இருப்போம் ! அதிக நாட்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டிய அவசியம் நமக்கு ஏற்படாது என்றே நினைக்கிறேன்


முழங்கால்களிலும் கைகளிலும்
இணைக்கப்பட்டிருந்த இரப்பர் கோப்பைகளின்
துணை கொண்டு எதிர் கட்டிடத்தின்
உச்சியை நோக்கி ஏறத் தொடங்கியது
அந்த உருவம்.


மேல் தளத்தை சென்றடைந்ததும்
முதுகில் சுமந்து வந்த விசைத் துப்பாக்கியை
கீழே இறக்கி எதிரே தெரிந்த ஜன்னலை
குறிவைத்து நிலைப்படுத்தியது.


பத்து விஞடிகளுக்குப் பின் - அந்த விபரீதம் நிகழ்ந்தது...
டமால்!
ஆஆ!
உறுதியான மேஜை அரணுக நின்றதால் அதிர்ஷ்டவசமாக தப்பித்துக் கொண்டு விட்ட லாரன்ஸ் தட்டுத் தடுமாறி எழுந்து டேவிட்டின் அருகே ஓடினுர்.. அப்போது எதிர் கட்டிடத்தின் மேல் தளத்திலிருந்த உருவம் அவர் பார்வையில் விழுந்தது.
இந்தக் கம்பி என் எடையை தாங்க வேண்டுமே,.!


கூடிய வரை வேகமாக நகர்ந்து இடைவெளியை லாரன்ஸ் கடந்து எதிர்க் கட்டிடத்தை சமீபித்து விட்டபோது எதிரி மீண்டும் ஒரு முறை சுட்டான்.
செத்துத் தொலை.. சனியனே!
அவ்ர!


மறுநிமிடம்—சுயவுணர்விழந்த எதிரியைத் தூக்கிதோளில் போட்டுக் கொண்டு டெலிபோன் கம்பியின் உதவியோடு தன் அறைக்கு திரும்ப வந்தார் லாரன்ஸ்.
டேவிட்டுக்கு அசம்பாவிதமாக ஏதும் நிகழாமலிருக்கவேண்டும் !
உடனே வந்து சேர்ந்தது ஆம்புலன்ஸ் வண்டி.. சுயவுணர்வு திரும்ப வரப்பெற்றார் டேவிட்,
சீக்கிரமே நீ குணமடைந்து விடுவாய் - அ. கொ. தீ. கழகத்தினரையும் கிங் கோப்ராவையும் சமாளிக்கும் பொறுப்பை நான் கவனித்துக் கொள்கிறேன் - நீ வீணாக அலட்டிக் கொள்ளாதே டேவிட் !
சிதிலமடைந்து கிடந்த தன் அறைக்குத் திரும்பிய லாரன்ஸ் எதிரியின் முகமூடியை அகற்றினார்.
நீ இப்போது எல்லா விபரங்களை என்னிடம் ஒப்பித்தாக வேண்டும்..
நீ என்னிடமிருந்து எதையுமே தெரிந்து கொண்டுவிட ம்டியாது., !


மறுகணம்-
உன் எடை நூற்று எண்பது பவுண்டுகள் இருக்கும் என்பது என் கணிப்பு.. உன்னை கட்டித் தொங்கவிட பயன்படுத்தப்பட்டிருக்கும் இந்தக் கயிற்றின் தாங்கும் திறனும் சரியாக நூற்று எண்பது பவுண்டுகள் தான்
எதிரியின் காலடியிலிருந்து நூறு அடிக்கும்கீழே இருந்தது காங்கிரீட் தளம்!
எதிரி லேசாக திமிறினான் - அவ்வளவுதான். கயிறு அறுந்து போகத் தொடங்கியது !
ஹா. ஆ. ஆ.., ! என்னைக் காப்பாற்று எல்லா விபரங்களையும் சொல்லிவிடுகிறேன்... !
இதுதான் புத்திசாலிக்கு அழகு !



அவனை கைலாகு கொடுத்து இழுத்துக் கொண்டார் லாரன்ஸ்.
எங்களை ஒழித்துக் கட்ட உன்னை அனுப்பியது யார் ?
கிங் கோப்ரா.. !
அவன் எங்கே இருக்கிறான் இப்போது - ?
கார்ன்வாலில் உள்ள ஒரு பழைய கோட்டையில்...
அந்த கோட்டைக்கு எப்படி செல்ல வேண்டும் என்ற விபரத்தை சொல்..
அவனிடமிருந்து தேவையான விபரங்கள் அனைத்தையும் கேட்டறிந்து கொண்டபின் அவனை ஸ்காட்லாந்து உளவுப்பிரிவினர் வசம் ஒப்படைத்துவிட்டு இரவோடிரவாக கார்ன்வால் நோக்கி காரில் விரைந்தார் லாரன்ஸ்.
TO THE WEST !
விடிவதற்குள் டேவிட் இறந்து போகக்கூடும் என்கிறார்கள். டேவிட்டின் மரணத்துக்கு நான் பழிவாங்காமல் விடப் போவதில்லை !


விடிவதற்கு வெகு நேரத்திற்கு முன்பே கிங் கோப்ரா தங்கியிருந்த கோட்டையருகே வந்து சேர்ந்து விட்டார் லாரன்ஸ் !
தோற்றமே பயங்கரமாக இருக்கிறது.. கிங் கோப்ரா போன்ற விஷ ஜந்துக்கள் வசிக்க ஏற்ற இடம்தான்.!


கோட்டையை நெருங்கிய லாரன்ஸ் மேலே பார்வையை நீளவிட்டு ஆராய்ந்தார்.
வரவேற்கப்படாத விருந்தாளி நான் - அதோ அங்கே உயரே தெரியும் ஜன்னல் வழியாகத்தான் நுழைய வேண்டும் !
யாரும் இல்லை.. குதித்து விடவேண்டியதுதான்.. !



அவருடைய பாதங்கள் தரையை தொட்ட அதே கணத்தில் அதுவரை காரிருளில் மூழ்கிக்கிடந்த அந்த இடம் திடீரென்று பிரகாசமடைந்தது.. அதைத் தொடர்ந்து பாம்பின் சீற்றம் போன்ற குரல் கேட்டது..
ஆகா.. நான் விரித்த வலையில் நீயாகவே வந்து விழுந்துவிட்டாய்.. உனக்காகத்தான் இங்கே நான் காத்துக் கொண்டிருக்கிறேன் லாரன்ஸ் !
ஹா! ஹா!
விலகிச் செல்ல எண்ணி ஓடத் தொடங்கிய லாரன்ஸ் ஒரு உலோக பரப்பின் மீது காலை வைத்ததும் -
ஹா. ஆ ஆ..!


உயர் அழுத்த மின்சாரத்தால் தாக்குண்ட லாரன்ஸ் சுயவுணர்விழர்து கீழே விழுந்ததும் மறைவிடத்திலிருந்து வெளிவந்தது ஓர் உருவம்... !
வெகு நேரத்திற்குப் பின் லாரன்ஸ் சுயவுணர்வு வரப் பெற்ற போது தான் நாற்காலியோடு சேர்த்துக் கட்டப் பட்டிருப்பதைக் கண்டார்.
இப்போது நீ பேசப் போகிருய்.. !
மாட்டேன்..! என்னை பேச வைக்க உன்ஞல் ஆகாது !
என் வார்த்தைகளுக்கு இணங்கக்கூடாது என்ற உறுதியை இந்தக் கருவி இப்போது உன் நெஞ்சிலிருந்து அகற்றப் போகிற.. அதன் பின் உன் மனம் ஒரு திறந்த புத்தகம்தான் - எனக்குத் தேவையான அனைத்து தகவல்களும் தடங்கவின்றிக் கிடைக்கும் !


கிங் கோப்ரா ஒரு விசையை அழுத்த - அலறத் தொடங்கினார் லாரன்ஸ்.. அவரது குரல் ஒரு சிறுவனின் குரலைப் போன்றிருந்தது.
உன் வயது இப்போது ஐந்து - இல்லையா ?
ஆமாம்.. எனக்கு ஐந்து வயது தான் – என் அம்மா வேண்டும்.. உம்ம்.. ம்.. ம்.. !
இன்னொரு விசையை சுழற்றினான் அந்தக் கிராதகன்..
இப்போது 1985ம் வருடத்துக்கு வந்து விட்டாய்.. ஐ. நா. உளவுத்துறையைச் சார்ந்த உளவாளி நீ !
ஆமாம்.. என் பெயர் லாரன்ஸ்.. !
அ. கொ. தீ. கழகத்தை எதிர்த்துப் போராடி அழிக்க அமைக்கப் பட்டிருககும் விசேட உளவுப் பிரிவைப் பற்றிய முழு விபரத்தையும் இப்போது நீ எனக்கு சொல்கிறாய்.. !



தயக்கமின்றி உணர்ச்சியற்ற குரலில் மளமளவென்று விபரங்களை ஒப்பிக்கலானார் லாரன்ஸ்..
விசேட உளவுப் பிரிவின் தலைமையகம் நியூயார்க்கில் மாடிஸன் அவென்யூவிலுள்ள ஒரு முடி திருத்தும் கடையின் கீழ் தள அறையில் இயங்கிவருகிறது.. இலண்டன். பாரிஸ், ரோம் இங்கெல்லாம் அதன் கிளைகள் உண்டு..
நல்லது.. அவற்றின் முகவரிகளும் தேவை..
அனைத்தையும் சொல்லி முடித்தார் லாரன்ஸ்.
நீயும் டேவிட்டும்தான் மூத்த உளவாளிகள் - இல்லையா ! அது சரி.. இப்போது டேவிட் எங்கே இருக்கிறான் ?
இன்று மாலையில் பயங்கரமாக காயமடைந்து விட்டான் டேவிட்.. விடிவதற்குள் இறந்து போவான் என்று சொல்லப்படுகிறது
திருப்தியடைந்தவனாக அந்த இயந்திரத்தின் இயக்கத்தை நிறுத்தினான் கிங் கோப்ரா.. லாரன்ஸ் மயக்கமுற்றார்.
இனி நீ பிழைத்து இருந்தாலும் சொந்த விருப்பு வெறுப்புகள் இல்லாத ஜடமாகத்தான் நடமாடுவாய்.. ஆனாலும் உன்னை நான் உயிரோடு அனுப்பப் போவதில்லை !


லாரன்ஸை சிறு குழந்தையை தூக்குவதுபோல்
அநாயாசமாக தூக்கிக்கொண்டு
இருளினூடே நடந்தான் அந்த முரடன்..
ஒரு குத்துப் பாறையின் விளிம்புக்கு
வந்து நின்றான்,. நேர் கீழே கடல்
ஆரவாரித்துக் கொண்டிருந்தது.
லாரன்ஸை கடலுக்குள் வீசி எறிந்தான்
கிங்கோப்ரா.
போய்ச் சேர்..!


அதைத் தொடர்ந்து அலைகளின் பேரிரைச்சலையும் மிஞ்சிக்கொண்டு கேட்டது அவனது குரல் -
என் எதிரிகள் இருவரும் செத்தொழிந்தார்கள்.. இனி அ. கொ. தீ கழக தலைமையை ஏற்றுக் கொண்டு இந்த உலகை ஆட்டிப் படைக்கப் போகிறேன் !


ஒரு நாள் இடைவெளிக்குப் பின் - நியூயார்க் மாடிஸன் அவென்யூவிலிருந்த முடி திருத்தும் கடையில்..
ம்.. எல்லோரும் சுவர் அருகே சென்று கையை தூக்கிக் கொண்டு நில்லுங்கள்.. !


கீழ்த் தளத்தில் -
ஐ. நா. உளத்துறையை சேர்ந்த விசேட பிரிவின் தலைமையகம்.
துரதிர்ஷ்டமாக உருவாகி விட்டிருக்கும் மோசமான சூழ்நிலையில் நாம்— அதென்ன... சப்தம்?


சுட்டுக் கொண்டே உள்ளே நுழைந்தனர் முரடர்கள்.
டமீல்!
டமீல்!


அன்றிரவு இலண்டனில் கூடிய அ கொ.தீ. கழக தலைவர்களோடு ஆலோசனை நடத்தினான் கிங் கோப்ரா.
கனவான்களே! எதிரிகள் அனைவரையும் ஒழித்துக் கட்டியாயிற்று.


வெற்றிக் களிப்பில் முழக்கமிட்டுக் கொண்டிருந்தான் அந்தச் சதிகாரன்.
லாரன்ஸூம் டேவிட்டும் செத்தொழிந்தார்கள்.. நம்முடைய கமாண்டோக்கள் நியூயார்க்கிலுள்ள ஐ. நா. உளவுத்துறை விசேட. பிரிவின் தலைமையகத்தையும் அதன் பாரிஸ், ரோம் கிளைகளையும் அழித்துவிட்டார்கள்.


இனி...?
இனி உலகை ஆட்டிப் படைக்க தேவையான அதிகாரத்தை கைப்பற்றும் திட்டத்தை செயல்படுத்தும் வழிமுறைகளில் இறங்குவோம்!


உலகப் படத்தின் முன் அனைவரும் குழுமினர்.
ரஷ்யா
ஐரோப்பா
வட அமெரிக்கா
இந்தியா
ஆப்பிரிக்கா
தென் அமெரிக்கா
இது அட்லாண்டிக் கடல்.. அந்தக் கடலின் நீர் முழுவதையும் வற்றிப் போகச் செய்யப் போகிறேன் நான் !


பிறிதோரிடத்தில்-
புரபஸர் . நாங்கள் உளவுத் துறையை சேர்ந்தவர்கள்.! டேவிட் பிழைத்து எழும் வாய்ப்பு எப்படியிருக்கிறது ?
கடினமான கேள்வி.. நம்பிக்கை கொடுக்கும் பதிலைக் கூற இயலாத நிலையிலிருக்கிறேன் !


அறுவை சிகிச்சை செய்யும் மேஜை மீது கவிழ்த்தப்பட்டிருந்த விநோதமான கண்ணாடி குமிழியினுள் டேவிட் வைக்கப்பட்டிருந்தார்.
நானே வடிவமைத்த ஒரு புதிய இயந்திரத்தின் துணை கொண்டு ஆபத்தான முயற்சி ஒன்றை செய்து பார்க்கப் போகிறேன்,.


படுகாயமடைந்திருக்கும் டேவிட்டின் உடலில் உயர் அழுத்த மின்சாரத்தை பாய்ச்சப் போகிறேன்.. இந்த முயற்சி பிழைக்க வைக்கலாம் அல்லது அவருடைய உயிரைக் குடித்து விடலாம் !


அறுவைச் சிகிச்சை நிபுணர் கொஞ்சம் கொஞ்சமாக மின்சாரத்தின் வீரியத்தை கூட்டிக் கொண்டே போனார் - புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட மின் அணு இயந்திரத்தின் வழி டேவிட்டின் உடலை ஊடுருவியது மின்சாரம்.
பன்னிரண்டு மணி நேரம் தொடரும் இந்த சிகிச்சை! இதன் முடிவில் டேவிட்டுக்கு என்ன ஆகுமோ.. பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்
அப்பாடா,.! டேவிட் தப்பிவிட்டார் ! ஆனாலும் சில நாட்களுக்குப் பின்னர்தான் இறுதி நிலவரம் தெளிவாகும்
குழுமியிருந்தோரின் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் பேசலானார் ஓர் உளவாளி..
லாரன்ஸின் கதி என்னவாயிற்று என்று தெரியாத நிலையில் டேவிட்டின் உயிரும் ஊசலாடிக் கொண்டிருக்கும் நிலை சமுதாயத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கியிருக்கிறது

## அத்தியாயம் 2: வெறித் திட்டம்!







குழந்தைகளில்லாத அந்தத் தம்பதியினர் அந்த அந்நியனை தங்கள் மகன் போலவே கருதத் தொடங்கியிருந்தனர்
அவர்களைப் பார்த்து வெறுமையாக புன்னகைத்தார் லாரன்ஸ்.
அப்பாடா.. பிழைத்துக் கொண்டு விட்டாய் மகனே ! உன் பெயர் எங்களுக்குத் தெரியாது.. நீயும் சொல்லும் நிலையில்லை. எனவே, என் சகோதரனின் பெயரான நெட் என்பதையே உனக்குச் சூட்டுகிறேன் !
நெட்... நெட்... !
இதற்கிடையே அட்லாண்டிக் கடலில் விரைந்து கொண்டிருந்தது ஒரு சிறு நீராவிக் கப்பல்..


ஒரு வரை படத்தை சுட்டிக்காட்டி தன்
சகாக்களிடம் ஏதேதோ விவரித்துக்
கொண்டிருந்தான் கிங் கோட்ரா..
நாம் இப்போது நீரின் அடியிலுள்ள
பெரிய எரிமலையின் நேர்
மேலே இருக்கிறோம்


பின்னர், பார்க்கவே அச்சமூட்டுவதாக
இருந்த ஒரு உருளையை சுட்டிக்
காட்டினான்..
இந்த அணு குண்டை வெடிக்கச்
செய்து எரிமலையின் வாயைத்
திறந்துவிடலாம்.. கடல்நீர் எரிமலை
வாய் திறப்பின் வழியாக உள்ளே
வேகமாக பாயும்


அதன் விளைவாக அட்லாண்டிக் கடலின் நீர் மட்டம் வேகமாகக் குறையத் தொடங்கும்.. அதைத் தொடர்ந்து மற்ற இடங்களிலும் நீர் மட்டம் குறையும்.. உலகம் முழுவதும் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தும் இந்த விஷமச் செயல் ! அந்தக் கொந்தளிப்பை சாதகமாக்கிக் கொண்டு அ. கொ. தீ. கழகம் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கும் !


அங்கே சிகிச்சை முற்றுப் பெற்ற நிலையில்...
எழுந்திரு டேவிட்.. ! மெள்ள நடக்க முயற்சி செய் !


சட்டென்று குதித்து எழுந்தார் டேவிட்.
நீ.. எந்த அளவுக்கு இழந்த சக்தியை திரும்பப் பெற்றிருக்கிறாய் என்று கணக்கிட இந்த தகட்டின் மீது ஓங்கி குத்து.. பார்க்கலாம் !
மின் அதிர்ச்சி வைத்தியம் டேவிட்டை வெகுவாக பலவீனப் படுத்தியிருக்கலாம் !


ஆனால்...
அஹ்..!
மற்ற சோதனைகள் தொடர்ந்தன..
பிரமாதம் டேவிட் !
பலவீனமடைவதற்குப்பதில்
இரு மடங்கு சக்தியை
பெற்றிருக்கிறாய் !



அ. கொ. தீ .கழகத்தினரை வேரறுத்து லாரன்ஸின் மரணத்துக்கு பழி வாங்கப் போகிறேன் - இப்போதே... !
அங்கே அட்லாண்டிக் கடல் பகுதியில் -
வெரிகுட் !
உதவியாளர்கள் மூழ்கிச் சென்று நீரடி எரிமலையின் இருப்பிடத்தை தேடிக் கண்டுபிடித்து அணுகுண்டை வைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்
கடலுக்குள் ஒய்ந்து போய்க் கிடந்த எரிமலையின் வாய்ப் பகுதியில் வைக்கப்பட்டது அணுகுண்டு
ம்.. அங்கே இறக்கு !



மூன்று மணி நேரத்திற்குப் பின்..
அ. கொ. தீ. கழகத்தினரின் கப்பல்,
இலக்கிலிருந்து விலகி பாதுகாப்பான
தூரம் சென்று விட்ட நிலையில் -
அணுகுண்டை வெடிக்கச் செய்யும்
விசையை இடு... !
மறு கணம் - கடல் பிராந்தியத்தில்
பெரிய கொந்தளிப்பு எழுந்தது.
டம்-டமால்!


வெற்றிச் சிரிப்புச் சிரித்தான் நாசகாரன் !
அட்லாண்டிக் கடல் மறையப் போகிறது.. அதைத் தொடர்ந்து உலகம் முழுவதும் பீதியும் குழப்பமும் ஏற்படும் !


பிறிதோரிடத்தில் நெட் என்றழைக்கப்பட்ட இளைஞன் பிரம்மாண்டமானதொரு காட் வகை மீனை பிடித்துவிட்ட மகிழ்ச்சியில் இருந்தான்.
பிரமாதம் தம்பி..! என்னுடைய ஐம்பதாண்டு கால மீன்பிடி அனுபவத்தில் இந்தப் பிராந்தியத்தில் இத்தனை பெரிய மீனைப் பார்த்ததேயில்லை !


அந்த வயதான மீனவன் படகை கரை சேர்க்க முயன்றபோது தெளிவாகத் தெரிந்த ஒரு மாற்றத்தைக் கண்டு துணுக்குற்றான்...
இன்னொரு விஷயம் - என் வாழ்நாளிலேயே கடல் இத்தனை அளவுக்கு உள்வாங்கிப் போனதை நான் கண்டதேயில்லை !
தான் பிடித்த பிரமாண்டமான காட் வகை மீனை கையில் தூக்கிக் கொண்டு நெட் என்னும் அந்த இளைஞன் கரையேறிய போது கையில் காமிராவோடு எதிர்ப்பட்டார் ஒரு சுற்றுலா பயணி.
ஹே.. கொஞ்சம் அப்படியே நில் தம்பி.. ! நிச்சயம் இது ஒரு சாதனையாக இருக்கக்கூடுமாதலால் நாளிதழ்கள் இதனை விரும்பி பிரசுரிக்கக் கூடும் !


அன்று எல்லா கடற்கரையோரப் பகுதிகளிலும் கடல் வெகுவாக உள்வாங்கிப் போன விநோதம் உணரப்பட்டது. பெரிய கப்பல்கள் எல்லாம் தரைதட்டிப் போயின..
தரைதட்டிவிட்டது. இனி அதை நகர்த்த முடியாது !


அங்கே - அ. கொ. தீ. கழக தலைமையகத்தில் செய்தித்தாள்களில் வந்திருந்த அறிக்கைகளை படித்துவிட்டு விகாரமாக சிரித்தான் கிங் கோப்ரா..
தினக்கதிர்
செய்தி மலர்
உலகசெய்தி
தினச்சுடர்
முட்டாள்கள்,, ! ஏதோ இயற்கை விபரீதம் என்று எழுதியிருக்கிறார்கள் ! நிஜத்தை விரைவிலேயே தெரிந்துகொள்வார்கள்.


உலகம் முழுவதிலும் பீதியையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் வகையில் கிங் கோப்ரா செய்த விஷமத்தனம் இது என்று அவர்கள் புரிந்து கொள்வார்கள்.


அவனுடைய கிறுக்குத்தனமான உளறல் சட்டென்று நின்றது..
என்ன விஷயம் ? யாரும் என்னை தொந்தரவு செய்யக் கூடாது என்று உத்தரவிட்டிருந்தேனல்லவா?
செய்தித் தாளில் வந்துள்ள ஒரு புகைப்படத்தை நீங்கள் அவசியம் பார்க்க விரும்புவீர்கள் என்று எண்ணி எடுத்து வந்தேன்.



இருக்க முடியாது.. அவன்தான் செத்துவிட்டானே.. பாறை உச்சியிலிருந்து நான் தானே தூக்கி எறிந்தேன்,. பின்னே எப்படி ?
உடனே ஒரு குழுவை கார்னவாலுக்கு அனுப்பு.. லாரன்ஸ் எங்கிருந்தாலும் கண்டுபிடித்து ஒழித்துக்கட்டச் சொல் !
அதே சமயம், இன்னமும் மருத்துவ மனையில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த டேவிட் உற்சாகத்தால் துள்ளிக் குதிக்கலானார்..
அவரேதான்.. இன்னமும் உயிரோடுதானிருக்கிறார்.. !


என்ன காரியமாக அங்கே தங்கியிருக்கிறார் என்று தெரியவில்லை.. கிங் கோப்ராவும் இந்த படத்தை பார்த்திருப்பான்.. அவனுடைய ஆட்கள் லாரன்ஸுக்கு தொல்லை கொடுக்கு முன் நான் போய் அவரோடு சேர்ந்து கொள்ளப் போகிறேன்


அன்று மாலை - அந்த சிறு குடிலின்கதவை யாரோ தட்டினார்கள்.
நெட்..! யாரோ உன்னைத் தேடி வந்திருக்கிறார்கள் !


வந்திருந்தோர் கிங் கோப்ராவின் ஆட்கள்..
யார் நீங்கள்..? என்னை லாரன்ஸ் என்று அழைக்கிறீர்களே.. ஏன் ?
எழுந்து நடடா.. நாயே ?


இங்கே வந்து ஒளிந்து கொண்டுவிட்டால் கண்டுபிடிக்க மாட்டோம் என்று நினைப்பா..?
நீங்கள் தேடும் நபர் நான் அல்ல.. என் பெயர் நெட் !


வற்புறுத்தி லாரன்ஸை வெளியே தள்ளிக் கொண்டு போன முரடர்கள் தயாராக காத்து நின்ற காரினுள் அவரை தூக்கிப் போட்டனர். ஒருவன் மீனவ தம்பதியினரைப் பார்த்து எச்சரிக்கை விடுக்கலானான்..
இங்கே நடந்த அனைத்தையும் மறந்து விடுங்கள்.. அதுதான் உங்களுக்கு நல்லது ! யாரிடமாவது இதைப்பற்றி உளறினீர்களோ நாங்கள் திரும்பி வருவோம்.. புரிகிறதா !
அவர்கள் கடற்கரை சாலைவழியே காரை செலுத்திக்கொண்டு போன போது எதிர்பட்டது இன்னொரு கார்.. ஓட்டி வந்தவர் டேவிட் !
அவர்களாகத்தானிருக்கும்.,! முந்திக்கொண்டுவிட்டார்கள் போலிருக்கிறது !


அ. கொ. தீ. கழக காரை ஓட்டிய நபர் சுதாரித்துக் கொள்ளுமுன் அந்த விபரீதம் நிகழ்ந்துவிட்டது.
ஐயோ.. நேரே நம்மை குறிவைத்தல்லவா வருகிறன் !
அ ஹ்.. !


டமால்!


டேவிட் சமாளித்துக் கொண்டு எழுந்த போது எதிரிகள் கையில் துப்பாக்கியோடு வந்துவிட்டனர்.
அது - டேவிட் அல்லவா ! பிடியுங்கள் அவனை !


என்னையா பிடிக்கப் போகிறீர்கள் நல்ல வேடிக்கைதான் !
ஊய்ய்... ய்ய் !
அ.. ம்.. மா.. !


டேவிட்டின் அசுரத்தனமான தாக்குதலுக்கு எதிரிகளால் தாக்குப்பிடிக்க முடியவில்லை..
மடேர்!
ஐ.. யோ..?
அனைவரையும் அடித்து வீழ்த்திய பின் -
நீ யார்..? என்ன நடக்கிறது இங்கே..?
ஸார்.. என்னைத் தெரியவில்லையா - நான் தான் டேவிட்! உங்களுடைய சகா..!
லாரன்ஸ் தப்பித்துவிட்ட செய்தி கிங் கோப்ராவை எட்டியது..
என்ன.. லாரன்ஸ் தப்பிவிட்டானா? - ம்.. அதனால் ஒன்றும் மோசமாகிவிடப் போவதில்லை! என் திட்டம் ஏற்கனவே விளைவுகளை ஏற்படுத்தத் தொடங்கிவிட்டது. இனி யாராலும் அதைத் தடுத்து நிறுத்த முடியாது.. நினைவாற்றலும் சிந்திக்கும் திறனும் இல்லாத லாரன்ஸ் என்ன செய்து விடமுடியும்!
அன்றிரவு 'நெபோலி' என்னும் இத்தாலிய கப்பல் நடுக்கடலில் தரைதட்டி நின்று போனது.


அந்தக் கப்பல் நின்று போன இடம் காலந்தொட்டு கடல் நீரினடியில் மூழ்கிக்கிடந்த நிலப்பகுதி என்று விடியற்காலையில் தெரிய வந்தது.
கிங் கோப்ராவின் திட்டம் வெற்றியடையத் தொடங்கிவிட்டது !


இதற்கிடையே தன் திட்டத்தின் அடுத்த கட்டத்திற்கு அஸ்திவாரம் போடலானான் கிங் கோப்ரா.
நடுக் கடலில் கப்பல் தரை தட்டிய விபரீதம் !
அட்லாண்டிக் கடல் பற்றிய விபரங்கள்


நியூயார்க்கில் ஐ. நா சபை செயலாலர்
வெளிறிய முகத்தோடு பேச எழுந்தார்..
படமாக்கப்பட்ட ஒரு செய்தியை இப்போது உங்களுக்கு போட்டுக் காண்பிக்கப் போகிறேன் - யாரங்கே விளக்குகளை அணை !


பாதி மறைக்கப்பட்ட பயங்கர முகம் ஒன்று
திரையில் தோன்றியது
நான்தான் கிங் கோப்ரா !



கடல் நீரின் அடியில் இருக்கும் ஒய்ந்து போனதொரு எரிமலையின் வாயை நான் திட்டமிட்டு திறந்து விட்டிருக்கிறேன்.. இதன் காரணமாக கடல் நீர் மட்டம் வேகமாக குறைந்து வருகிறது. உலகம் மொத்தமும் தீர்க்கப்படவே முடியாத பல பிரச்சனைகளை இது உருவாக்கும்..
அந்த எரிமலையின் இருப்பிடம் எனக்கு மட்டும் தான் தெரியும். அதன் வாயை முட என்னால் மட்டுமே சாத்தியம்., அதற்கு நான் விதிக்கும் நிபந்தனை - அனைத்து அரசாங்கங்களும் அதிகாரத்தை என் வசம் ஒப்படைக்க வேண்டும்!
பிறிதோரிடத்தில்...
புரபஸர் நீங்கள் எப்படியாவது என் நண்பரை பழைய நிலைக்கு கொண்டு வந்துவிடவேண்டும்,.
லாரன்ஸ்.. உங்களுக்கு இந்நிலை ஏற்பட எதிரிகள் என்ன வகையான தீங்கு செய்தார்கள் என்ற விபரம் எனக்குத் தேவை.. விபரமாக சொல்லுங்கள் !



என் பெயர் நெட்.. நீங்கள் கேட்கும் கேள்வி எனக்குப் புரியவில்லை.. ஏன் - நான் நன்றாகத்தானே இருக்கிறேன் !
இவருடைய நினைவாற்றல் முழுவதுமாக அற்றுப் போய் விட்டிருக்கிறது..
அங்கே உலகம் மொத்தமும் பெரும் கொந்தளிப்பு ஏற்படும் அபாயம் உருவாகிக் கொண்டிருக்கிறது.. அதை எதிர்த்துப் போராடும் வல்லமை பெற்ற மனிதரோ ஆதரவற்ற அனாதைக் குழந்தை போல் ஓய்ந்து கிடக்கிறார்...
ஆத்திரப்படாதே டேவிட்.. லாரன்ஸை விரைந்து குணமாக்க ஏதாவது உபாயம் செய்வோம் !
அறுவைச் சிகிச்சை மேஜை மீது லாரன்ஸ் படுக்க வைக்கப்பட்டார். விநோதமான கண்ணாடி குமிழியை அவர் மீது போர்த்த முயற்சி நடந்தது.
அலட்டிக் கொள்ளாமல் அமைதியாக இருங்கள்..
என்ன இதெல்லாம் ?


கிங் கோப்ராவுக்கு கொடுக்கப்பட்ட மறு மொழி என்ன என்று அன்று மாலை பத்திரிக்கைகளில் செய்தி வெளியானது.
கிங் கோப்ராவின் கோரிக்கைகளை ஐ. நா. சபை நிராகரித்தது.
இரண்டு நாட்கள் கழிந்தன.. தேம்ஸ் நதி வற்றிப் போய் சிற்றுறு போல சலசலத்து ஓடியது.


இதற்கிடையே - லாரன்ஸுக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்கப் பட்டு வந்தது..
சிகிச்சையின் பலன் எப்போது தெரியும்.. புரபஸர் !
பொறுமை.. பொறுமை !


இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் இடையே தரைமார்க்கமாக வழி ஏற்பட்டுப் போனது...
விந்தையான சமாசாரம் தான்! இங்கிலீஷ் கால்வாய் இப்படி வற்றிப் போகும் என்று யாரும் கனவு கண்டது கூட இல்லை!


வற்றிப் போனது கடல் மட்டுமல்ல.. குடிநீர் தேக்கங்களும் தான் !
குடி தண்ணீர் பிரச்னை கடுமையாக இருக்கும் போலிருக்கிறதே !
இந்த வீதத்தில் போனால் அடுத்த வாரம் ஒரு சொட்டுத் தண்ணீர் கூட விநியோகிக்க முடியாது !


பிரிட்டிஷ் அரசாங்கம் அவசரக் கூட்டம் ஒன்றைக் கூட்டியது.. ஆவேசப் பேச்சுக்களும் மாறுபட்ட கருத்துக்களும் ஒரு முடிவெடுக்க தடையாகிப் போயின.,
குடிநீரை பங்கீட்டு முறையில் வழங்க வகை செய்யவேண்டும்
விநியோகிக்க தண்ணீர் இல்லையே - கிங் கோப்ராவின் கோரிக்கைக்கு அடிபணிந்து போவதைத் தவிர வேறு வழியில்லை.. துருப்புச் சீட்டு அவன் கையில் !
அமைதி.. அமைதி !


வேகமாக வடிந்து வந்த அட்லாண்டிக் கடலில் மிதந்து கொண்டிருந்த ஒரு உல்லாசக் கப்பலில்..
உலகின் பல பாகங்களிலும் ஒலி பரப்பான கவலை தோய்ந்த செய்தி அறிக்கைகளை ஆர்வத்தோடு கேட்டுக் கொண்டிருந்தான் கிங் கோப்ரா.
எங்கும் பீதி.. குழப்பம் தலை விரித்தாடுகிறது
ஓரிரு வாரங்களில்.. அல்லது அதற்கு முன்னதாகவே எல்லா நாடுகளும் சரணடையப் போவது உறுதி ! அதன் பின்.. இந்த உலகம் மொத்தமும் என் வசமாகிவிடும்.. !


இதற்கிடையே - சிகிச்சையின் முக்கிய கட்டம் முடிந்து அதுவரை லாரன்ஸை போர்த்தியிருந்த கண்ணாடிக் கூண்டு அகற்றப்பட்டது.
வெற்றியா.. தோல்வியா - புரபஸர் !
இன்னும் கொஞ்ச நேரத்தில் தெரிந்து விடும் !


யுகங்களாக நகர்ந்த சில நிமிட இடைவெளிக்குப் பின் மெள்ள கண்களைத் திறந்தார் லாரன்ஸ்.,
யார்.. நீயா..! என் நண்பன் டேவிட்டா என் எதிரே நிற்பது !


ஸார்.. உங்களுக்கு நினைவாற்றல் திரும்பிவிட்டது,.!
அவசரப்படாதீர்கள்.. வரிசையாக சில பரிசோதனைகளை நிகழ்த்தி மூளையில் இன்னமும் பாதிப்பு ஏதுமிருக்கிறதா என்று தீர்மானிக்க வேண்டும் !
பரிசோதனை தொடங்கியது..
இப்போது இரண்டை இரண்டால் பெருக்குங்கள்.. வரும் விடையை அதே எண்ணால் பெருக்குங்கள்... இப்படியே எந்த அளவுக்கு தொடர முடியுமோ தொடர்ந்து முயற்சியுங்கள்!
மிகச் சுலபம்.,! இரண்டை இரண்டால் பெருக்கினால் நான்கு, நான்கு X நான்கு = பதினாறு,. பதினாறு X பதினாறு = இருநூற்றிஐம்பத்தாறு...


லாரன்ஸ் பெருக்கிக் கொண்டே போனார் - அருகே இருந்தவர்கள் வியப்பால் வாயடைத்துப் போகும் வரை !
4, 482, 170 X 4, 482, 170 = 200, 908, 479, 038, 900


அரைமணி நேரம் கழித்து போதும் என்று சைகை செய்தார் புரபஸர்..!
அற்புதம்..! கொடுக்கப்பட்ட விசேட சிகிச்சை உங்களை ஒரு மனித கம்ப்யூட்டராகவே ஆக்கிவிட்டது !
நன்றி புரபஸர்,..!
KEEP OUT


புரபஸர் நமக்கு அளித்த விசேட சிகிச்சையின் பயனாக அதீத மூளைத்திறன் உங்களுக்கும் அபரிமிதமான உடல்வலிமை எனக்கும் வாய்த்துள்ளது.. நாம் இருவரும் சேர்ந்தால் கிங் கோப்ராவை சுலபமாக அழித்துவிடலாம்.. இனி நமக்குத் தெரிய வேண்டிய தகவல் - அவனுடைய இப்போதைய இருப்பிடம் - அவ்வளவே !


அப்போது.. அந்த விபரீதம் நிகழ்ந்தது.
டம்!
ஆ ஆ.. !
ஊப்.. ப் !
கிங் கோப்ரா முந்திக் கொண்டு விட்டான்.


நல்லவேளையாக யாருக்கும் பலத்த அடி படவில்லை..
அதோ.. பாருங்கள் !
அந்த விமானம் மீண்டும் அவர்களை நோக்கி வந்தது.. இன்னொரு குண்டு அதன் வால் பகுதியிலிருந்து வெளிப்பட்டதை கண்ணுற்றனர்.
திரும்பி வருகிறது அந்த விமானம்... !


அவர்களுக்கு அருகே தரை பயங்கரமாக பெயர்த்துக் கொண்டு சிதறியபோது படுத்துக்கொண்டு விட்டனர் இருவரும்..
டமால்!
வந்த வேலையை முடித்துவிட்ட திருப்தியோடு விலகிப் பறந்து சென்று மறைந்தது அந்த விமானம்..
கிங் கோப்ராவின் கைவரிசை தான் இது.. !
புரபஸரைக் காப்பாற்ற முடியாமல் போனது..
எங்களுக்கு உயிர் கொடுத்த உங்கள் மரணத்துக்கு பழிவாங்காமல் ஓயமாட்டோம் புரபஸர்.. இது சத்தியம் !


ஒரு மணி நேரம் கழித்து ஓர் இரவல் காரில் லாரன்ஸும் டேவிட்டும் இலண்டன் நோக்கி பயணமாயினர்.
அடுத்து நம் திட்டம் என்ன ஸார்.. ?
பிரதமரை சந்தித்து கிங் கோப்ராவை சமாளிக்கும் முயற்சியை நம் வசம் விட்டு விடும்படி கோர வேண்டும்.. அந்த சைத்தானின் விளையாட்டு விபரீதமாகிப் போவதற்குள் நாம் அவனை வழிக்குக் கொண்டு வந்தாக வேண்டும்.
ஆனால் அவர்கள் டிரபால்கர் சதுக்கத்தை வந்தடைந்த போது அங்கே ஒரே ஜனத்திரள்...
இங்கே என்ன நடக்கிறது.. ?
இவர்களை ஊடுருவிக் கொண்டு நாம் போகமுடியாது !
அங்கே நிர்மாணிக்கப்பட்டிருந்த பெரிய டி. வி. திரையில் பிரதம மந்திரியின் உருவம் தோன்றியது.
அட்லாண்டிக் கடல்படுக்கையிலுள்ள பெரிய துளை ஒன்றின் வழியாக நீர் பாய்ந்து கொண்டிருப்பதால் கடல் நீர் மட்டம் வேகமாக குறைந்து வருகிறது.


இதன் தொடர் விளைவாக உலகெங்கும் ஏற்படவிருக்கும் கொந்தளிப்பை தவிர்க்க வேறு உபாயமில்லை என்ற நிலையில் கிங் கோப்ராவின் கோரிக்கையை நாங்கள் ஏற்றுக் கொண்டுவிட்டோம்,.
காரியம் கைமிஞ்சிப் போய்விட்டது.. கிங் கோப்ரா தான் நினைத்ததை சாதித்துவிட்டான்.
அன்று பிற்பகல் அணி அணியாக வந்த பல நூறு ஹெலிகாப்டர்களிலிருந்து பாரசூட் அணிந்த அ. கொ. தீ. கழக ஆசாமிகள் இலண்டனில் இறங்கினர்..
முதல் சுற்றில் அவன் வென்றிருக்கலாம்.. ஆனால் போராட்டம் இத்தோடு முற்றுப் பெற்றுவிடவில்லையே !
ா.தீ.க.


அதைத் தொடர்ந்து ஆயுதமேந்திய
அ. கொ. தீ. கழக படையினர் இலண்டன்
வீதிகளில் ரோந்து வரலாயினர்..
சாலைகளில் யாரும் நடமாடக்கூடாது
இன்னும் ஒரு மணி நேரம் கழித்து
சாலைகளில் தென்படுவோர் யாராக
இருந்தாலும் சுடப்படுவர்.. !
அ.கொ.தீ.க.


இரண்டுமணி நேரம் கழித்து, வெற்றி
வீரனாக, வெறிச்சோடிப் போயிருந்த
தெருக்களில் பவனி வந்தான் கிங் கோப்ரா.


பார்லிமெண்ட் கட்டிட நுழைவாசலருகே வந்ததும்...
இதையே என் சர்வதேச தலைமையகமாக வைத்துக் கொள்ளப் போகிறேன் !


தொலை தூரத்திலிருந்த ஒரு கட்டிடத்தின் மாடியிலிருந்தவாறு கிங் கோப்ராவின் நடவடிக்கைகளைக் கவனித்துக் கொண்டிருந்தனர் லாரன்ஸும் டேவிட்டும்.
பார்லிமெண்டை கைப்பற்றிக் கொண்டுவிட்டான் அந்த சனிப்பயல்...
இன்றிரவு அழையா விருந்தாளியாகச் சென்று அவனை நாம் சந்திப்போம்


அன்பார்ந்த உறுப்பினர்களே.. மிகக் குறுகிய காலத்திலேயே மிகப் பெரிய வெற்றியை ஈட்டியிருக்கும் நம் தலைவருக்கு பாராட்டுத் தெரிவிக்கும் வகையில் அனைவரும் எழுந்து நிற்குமாறு கேட்டுக் கொள்கிறேன்...



பின்னர் ஈடு இணையற்ற பயங்கர வாதியான கிங் கோப்ரா தன் சகாக்களைப் பார்த்து பேசலானான்...
இந்த உலகிலுள்ள அனைத்து நாடுகளையும் ஆளும் அதிகாரம் என் வசம் வந்துவிட்டது... மக்கள் அனைவருக்கும் ஒரு பயம் இருக்க வேண்டும் என்ற காரணத்தால் உலகிலுள்ள நீரில் பாதி காலியாகும் வரை நான் அட்லாண்டிக் கடலின் அடியிலுள்ள எரிமலையின் வாயை மூடப்போவதில்லை !
குழுமியிருந்தோரில் ஒருவர் மறுப்புத் தெரிவித்தார்.
அப்போது, குடிநீர் கிடைக்காமல் பாதி ஜனத்தொகை செத்து மடியும் அபாயம் இருக்கிறதே !
பரவாயில்லை.. உலகில் தேவைக்கு அதிகமாக ஏராளமான ஜனங்கள் இருக்கிறார்கள்.. கொஞ்சப் பேர் செத்துப் போகட்டுமே !
இரக்கமற்ற அந்த வார்த்தைகளைக் கூறிவிட்டு இருக்கையை விட்டு எழுந்தான் அந்தக் கல்நெஞ்சன்..
இங்கிலாந்தின் முன்னாள் பிரதமரின் அறை உங்கள் உபயோகத்துக்காக தயார் செய்யப்பட்டுவிட்டது.. பாஸ் !
தேவையில்லை - பார்லிமென்ட் கட்டிடத்திலேயே தங்கப் போகிறேன் நான் !


பிரதான ஹாலுக்கு வெளியே ஓரிடத்தில் சுவரில் ஓங்கி ஓர் உதை விட்டான் கிங் கோப்ரா.. அங்கே ஒரு திறப்பு உருவானது.
இந்தக் கட்டிடத்தில் பல இரகசிய சுரங்கப் பாதைகளும் வேறுபல புதிரான அமைப்புகளும் உள்ளன.. அனைத்து விபரங்களும் எனக்குத் தெரியும்.. குட்நைட் தோழர்களே !


பார்லிமெண்ட் கட்டிடத்துக்கு மிக அருகாமையில் இருட்டில் பதுங்கியிருந்தன இரு உருவங்கள்.
நம் அடுத்த நடவடிக்கை என்ன ஸார் ?


கிங் கோப்ராவை பிடித்து உதைத்து அட்லாண்டிக் கடலில் எரிமலை எங்கே இருக்கிறது என்று சொல்ல வைக்க வேண்டும். சீர் செய்ய முடியாத அளவுக்கு நிலைமை மோசமாகிப் போகுமுன் எரிமலை வாயை நாம் மூடியாக வேண்டும்


முற்றத்துக்குச் செல்லும் வழியை அடைத்துக்கொண்டு காவலிருந்தான் அ. கொ. தீ. கழக ஆசாமி ஒருவன்.
அவனை கொஞ்சம் கவனி டேவிட் !


டேவிட் விட்ட ஒரே குத்தில்
ஆசாமி அம்பேல்... !
ஒன்று போதுமா..
இல்லை -
ஆ ஆ...!
கும்!!


நிலவொளியில் குளித்துக் கொண்டிருந்த
முற்றத்திற்கு அவர்கள் வந்து சேர்ந்தபோது,
காலடியோசை கேட்டு பதுங்கிக்கொண்டனர்..
மாட்டிக் கொண்டு
விட்டோம் !
இந்த திறப்பை
தூக்கு - சீக்கிரம் !


சட்டென்று இருவரும் கீழே இறங்கிக் கொண்டு மூடியை அதன் இடத்தில் நிலைப்படுத்தினர்.
நல்ல வேளை... நம்மை அவர்கள் பார்த்துவிடவில்லை.
சீக்கிரமே தெரிந்து கொண்டு விடத்தான் போகிறார்கள்... நாம் அடித்துப் போட்டு விட்டு வந்த ஆசாமியின் நிலைமையை பார்த்து எச்சரிக்கையடைவார்கள்... நாம் துரிதகதியில் செயல்படவேண்டிய தருணம் இது!


பாழடைந்த சுரங்கப் பாதை வழியே நடந்தார்கள் இருவரும்.
நாம் எங்கே இருக்கிறோம் என்று உங்களுக்காவது புரிகிறதா ஸார்?
நினைவு தொட்ட காலத்திற்கு முன்பிருந்தே இந்த இடத்தை மையமாக வைத்து ஆட்சி புரிந்து வந்திருக்கிறார்கள்... ஏதோ ஒரு புராதன இரகசிய வழி இது என்பது என் யூகம்


இறுதியில் தென்பட்ட எஃகினாலான பெரிய கதவு ஒன்று அவர்கள் தொட்டதும் திறந்து கொண்டது... எதிரே விரிந்த காட்சி அவர்களை வியப்பில் ஆழ்த்தியது !
ஸார்... நம்பவே முடியவில்லை என்னால் !
என்னாலும்தான் ! என் கண்களால் இப்படி நேரில் பார்த்திராத பட்சத்தில் யார் சொல்லியிருந்தாலும் நம்பியிருக்கவே மாட்டேன் !


மிக விசாலமாக இருந்த அந்த அறையின் மத்தியில் ஓக் மரத்தினால் செய்யப்பட்ட ஓர் ஆடம்பர கட்டில் கிடந்தது. அதில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தது ஓர் உருவம்!


அது யாராக இருக்கும் ஸார் ?
டேவிட்... அதிர்ஷ்டம் நம் பக்கமிருப்பதாக தோன்றுகிறது ! என் கணிப்பு சரியாக இருக்குமேயானால் நாம் வழி தவறி வந்து சேர்ந்திருக்கும் இந்த இடம் அந்த சதிகாரன் கிங் கோப்ராவின் படுக்கையறையேதான் ! அங்கே படுத்திருப்பதும் அந்த விஷமியாகத்தானிருக்கவேண்டும் !


அகப்பட்டுக் கொண்டு விட்டாய் கிங் கோப்ரா..! இனி எங்களிடம் நீ வாலாட்ட முடியாது..



உள்ளே இருந்தது- கிங் கோப்ரா அல்ல !
ஹா.. இதென்ன-




சரிந்து உருண்ட அந்த உருவம் டேவிட்டின் காலடியில் வந்து சேர்ந்தது.. அதைத் தொடர்ந்து அட்டகாசமான பேய்ச் சிரிப்பு அந்த அறை முழுவதும் எதிரொலித்தது...
ஹி! ஹி!
ஹோ!
ஹா! ஹா!
இது வெறும் பொம்மை...!
ஹொ!
ஹி! ஹி!



மேல் மாடத்திலிருந்து கொண்டு அவர்களை நோக்கி கேலிச் சிரிப்பு சிரித்தான் கிங் கோப்ரா !
முட்டாள்கள்...! முட்டாள்கள்...! கிங் கோப்ராவை பிடிப்பது அத்தனை சுலபமான காரியம் என்று நினைத்தீர்கள் !
அதைத் தொடர்ந்து அவர்களை நோக்கி ஓர் கண்ணாடி உருளையை தூக்கி எறிந்தான் கிங் கோப்ரா..
விஷ வாயுவாக இருக்கக் கூடும்- டேவிட் ஜாக்கிரதை !
ஹா...!
சில நிமிட இடைவெளிக்குப் பின்-இளம் பச்சை நிற விஷ வாயு அங்கிருந்து முற்றிலுமாகவெளியேறிய பின் ...
விசேட சிகிச்சையின் பயனாக அதீத மூளைத்திறனும் கூடுதல் வீரியமும் பெற்றிருந்தாலும் கூட நீங்களிருவரும், எனக்கு ஈடாக மாட்டீர்கள்- இந்த உண்மையை உங்களுக்கு சீக்கிரமே புரிய வைப்பேன்...!


அடுத்த இரண்டு தினங்களுக்கு சுய உணர்வற்றுக் கிடந்தனர் லாரன்ஸும் டேவிட்டும். மூன்றாம் நாள் -
ம்.. எழுந்து நடங்கள்! கிங் கோப்ராவும் உயர்மட்டக் குழுவும் அங்கே உங்களை எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கிறார்கள்!


விசாலமானதொரு நிலவறைக்குள் கொண்டு செல்லப்பட்டனர் லாரன்ஸும் டேவிட்டும்...
அ. கொ. தீ. கழகத்தின் உயர் மட்டக் குழு இன்று எனக்கும் உங்களிருவருக்கும் இடையே நடக்கப்போகும் பலப்பரீட்சையை கண்டு களிக்கப்போகிறது!


அ. கொ. தீ. கழக தலைமை பதவிக்கு நான் ஏற்றவன்தான் என்பதை உறுதிப்படுத்த இந்த போட்டிகள் உதவக்கூடும்.
அவனுடைய அசிங்கமான விரல் நீண்டு லாரன்ஸை சுட்டிக்காட்டியது.
முதலில் மூளைத்திறனுக்கு ஒரு போட்டி! நான் வடிவமைத்திருக்கும் அந்த உருளையின் மீது கொண்டுபோய் நிறுத்துங்கள் இவனை...
கைகள் கட்டப்பட்ட நிலையில் ஓர் பிரம்மாண்டமான இரும்பு உருளையின் மீது நிறுத்தப்பட்டார் லாரன்ஸ்.
ம்... நகர்ந்து நகர்ந்து மத்திப் பகுதியில் போய் நில்!


கீழே பார்த்த லாரன்ஸ் தன்னை எதிர் நோக்கியுள்ள ஆபத்தை உணர்ந்து கொண்டார்.
ராட்சஸ தேள்கள் ! இவற்றின் விஷம் உடனே உயிரைக் குடிக்கும் ஆற்றல் பெற்றவையாகத்தானிருக்கும்.


கிங் - கோப்ராவின் திட்டம் என்ன என்பதை அவரால் ஓரளவு யூகிக்க முடிந்தது...
ம்... கம்ப்யூட்டர் ரெடியா ?
நான் - ரெடி - பரீட்சையை - தொடங்கலாம்...


பரீட்சையின் விதிகளை விளக்கமாக கூறுகிறேன் இப்போது - கம்ப்யூட்டர் கேட்கப் போகும் கேள்விகளுக்கு நீயும் நானும் விடை கண்டுபிடித்துச் சொல்லவேண்டும் - விடை உன்னிடமிருந்து தாமதமாக வரும் ஒவ்வொரு
சந்தர்ப்பத்திலும் நீ நிற்கும் உருளை சுழலும்..! ஒவ்வொரு சுழற்சியும் மரணத்தை நோக்கி நீ அடி எடுத்து வைப்பதற்கு சமம் ஆகும்!
ஓர் இறுக்கமான சூழ்நிலை உருவாகியிருந்தது அங்கே... இந்த வேடிக்கை எப்படி முடியுமோ என்கிற ஆர்வத்தில் எல்லோரும் பரபரப்போடு காணப்பட்டனர்.
ம் .. பரீட்சையை ஆரம்பிக்கலாம்... ஒன்..டூ..த்ரீ..!



மறுகணம் கம்ப்யூட்டர் முதல் கேள்வியை கேட்டது...
1885 ல் ஐரோப்பாவின் ஜனத்தொகை என்ன?... மில்லியன் சுத்தமாக சொன்னால் போதும் !
போட்டியாளர்கள் இருவரும் கண்ணிமைக்கும் நேரத்தில் சரியான விடையை கூறிவிட்டனர்..
முன்னூற்றி இருபத்தெட்டு மில்லியன் !
அடுத்து வந்தது ஒரு முரட்டுக் கேள்வி..
கார்பன் டை சல்பைடின் கொதி நிலை எத்தனை டிகிரி ?



போட்டியாளாகள் இருவருமே விடை தெரியாமல் திணறினர்... லாரன்ஸ் நின்றிருந்த உருளை மெள்ள சுழலத் தொடங்கியது.
சமாளித்து நிற்கமுடியவில்லை.. சீக்கிரமே விடை கண்டுபிடித்து சொல்லாவிடில் விஷத் தேள்களுக்கு மத்தியில் போய் நான் விழுவது நிச்சயம்!
சட்டென்று லாரன்ஸின் அதீத சக்திவாய்ந்த மூளையில் பளிச்சிட்டது விடை..
நாற்பத்தேழு - புள்ளி - ஒன்பது டிகிரி !
அதைத் தொடர்ந்து விஷப் பாம்பின் சீற்றம் போல் ஆங்காரத்தோடு ஒலித்தது கிங் கோப்ராவின் குரல்..
முதல் பாயிண்ட் உனக்கு.. ! இன்னொரு முறை விடையளிக்க நீ தாமதித்தாயானால் உருளை இரண்டு பங்கு வேகத்தில் சுழலும் என்று எச்சரிக்கை விடுக்கிறேன்.. ம் - வரட்டும்.. அடுத்த கேள்வி ?


ஆ.., ஐயோ !
ஆ., விழப் போகிறேன்.. !
மூன்றாவது கேள்வி கம்ப்யூட்டர் கூட விடையளிக்க திணறக்கூடிய வகையில் சிக்கலானதாக இருந்ததால் லாரன்ஸோ கிங்கோப்ராவோ விடையளிக்க முடியவில்லை. உருளை வேகமாக சுழல ஆரம்பித்தது.. லாரன்ஸ் சமாளித்து நிற்க முடியாமல் தடுமாறினார் !


வெறி கொண்டவராக தன்னைப் பிடித்து கொண்டிருந்தவர்களை சாடினார் டேவிட்.
இதோ வந்துவிட்டேன்.. அதுவரை தாக்குப் பிடியுங்கள் !


ஒரு ஓட்டம். ! ஒரு பாய்ச்சல் ! லாரன்ஸ் கீழே சரியுமுன் தாங்கிப் பிடித்துக் கொண்டார் டேவிட்..
விஷ்!


இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள் - கீழே குதிக்கப்போகிறோம் !


பயங்கர சாவுக்குழியை நோக்கி
வேகமாக ஓடிவந்து குழுமிய
அ. கொ. தீ. கழக ஆசாமிகள்மீது
டேவிட் பாய்ந்தார் - லாரன்ஸை சுமந்தவாறு.
ஆ ஆ...!
ஊப்ப்...!


அதிர்ச்சியால் சுயவுணர்விழந்து போனர்
லாரன்ஸ்... டேவிட் முரட்டுத்தனமாக
தாக்கத் தொடங்கினர்.
பிடியுங்கள் அவனை...
முட்டாள்களே - அவர்களை
தப்பவிட்டு விடாதீர்கள் !
கும்!
விலகிப் போங்கள் அப்பால் !


ஆனால் டேவிட் அந்த அறையை விட்டு வெளியேற முடியாதபடி இரும்புக் கதவு இறுக சாத்திக் கொண்டுவிட்டது.
சே ... மாட்டிக்கொண்டு விட்டோமே !


கேலியாகச் சிரித்தான் கிங் கோப்ரா..
தப்ப முடியாது டேவிட் !... லாரன்ஸ் போட்டியை தொடர முடியாத நிலையில் இருப்பதால், நீயும் நானும் உடல் உறுதியை சோதிக்கும் போட்டியில் ஈடுபடலாம்... வா !


சம்மதிப்பதை தவிர வேறு வழியில்லை டேவிட்டுக்கு...
முதலில் - குழந்தைத்தனமான சிறு போட்டி ஒன்று...
சொல்லித்தொலை...


எஃகுப் போன்று உறுதியான இந்த தடியை வளைக்க முடியுமா உன்னால் ?


அதை வாங்கி பிடரியில் வைத்து வளைக்க முயன்றார் டேவிட்...
ஊ ஊ ஊ... ப் !
பிரமாதம்... ! சாதித்துவிட்டாய் - பலே !
தடியை டேவிட்டிடமிருந்து வாங்கிய கிங் கோப்ரா மெலிதான தன் விரல்களுக்கிடையே வைத்து ஏதோ ரப்பரால் ஆன கோலை சரி செய்வது போல் அந்த உலோகத்தடியை மிக சுலபமாக நேராக்கிவிட்டான்!
நீ அதை வளைக்க ரொம்பவும்தான் சிரமப்பட்டு விட்டாய் - இல்லையா !


அடுத்த பரீட்சை சற்று ஆபத்தானது. தோற்றுப் போனால் சாவு நிச்சயம்! நான் பல முறை வெற்றிகரமாக செய்து முடித்ததுதான்.. நீ எப்படி சமாளிக்கிறாய் என்று பார்த்துவிடலாம் இப்போது !


பரீட்சைக்கான ஏற்பாடுகள் செய்து முடிக்கப்பட்டன,..
அந்தச் சங்கிலிகளின் முனையிலுள்ள வளையத்தை கைக்கு ஒன்றாக பற்றிக் கொள்ளவேண்டும் நீ...


ஆறேழு முரடர்கள் கூட்டாகச்சேர்ந்து நிர்மாணித்த அந்த அமைப்பை தனியொரு நபராக சமாளிக்கப் புகுந்த டேவிட்டின் ஒவ்வொரு சதையும் கிழித்துக் கொண்டு விடுவதுபோல் திணறியது..
உப்ப்ப்...!



செவிக்குள்ளே வரவர பெரிதாகிக்கொண்டே வந்த ரீங்கார ஓசையையும் மிஞ்சிக் கொண்டு கேட்டது கிங் கோப்ராவின் குரல்.
நீ தப்பிக்க ஒரே வழிதானுண்டு டேவிட்...! அது என்ன என்பதை நீயே யூகித்துக் கொள்... யூகிக்க முடியாவிடில் உன் அழிவு நிச்சயம் !
கைகள் தளர்ச்சியடையத் தொடங்கின... விரல்களும் வலிமையிழந்து போனதால் பிடி நழுவத் தொடங்கியது.
தப்பிக்க வழி இருப்பதாக தெரியவில்லை... பிடியை விட்டேனென்றால் அந்த இரும்புக் குண்டுகள் நேரே என் மீது விழும்.. மின்னல் வேகத்தில் அவற்றின் இலக்கிலிருந்து விலகினால்தான் உண்டு- அது சாத்தியம் என்று தோன்றவில்லை
இதற்கிடையே சுயவுணர்வு வரப்பெற்ற லாரன்ஸின் குரல் உரத்து எழுந்தது.
இரு வளையங்களையும் ஒன்றையொன்று தொடுமாறு இழுத்து சங்கிலிகளை முடிச்சுப் போட்டுவிடு டேவிட்... நீ தப்பிக்க அது ஒன்றுதான் வழி !
ஹா... அது நடக்கிற காரியமா !


உடலில் மீதமிருந்த சக்தியனைத்தையும் ஒன்று திரட்டி லாரன்ஸின் யோசனைக்கு செயல்வடிவம் கொடுக்க முனைந்தார் டேவிட் !
இறுதி முயற்சியாக - நெஞ்சு வெடித்துப் போவது போல் விம்மித் துடிக்க வளையங்களை ஒருவாறாக ஒன்று சேர்த்துவிட்ட டேவிட் ஒன்றோடொன்று முடிச்சுப் போட்டார்.
நீ சாதித்துத்தானாக வேண்டும் டேவிட் ! மனித சமுதாயத்தின் எதிர்காலம் இப்போது நீ ஏற்றுக் கொண்டிருக்கும் சவாலில் வெற்றியடைவதைப் பொறுத்துத் தானிருக்கிறது என்பதை நினைவில் கொள் !
ஆனால்... டேவிட் அங்கிருந்து விலக யத்தனித்த போது அந்த கனமான வீலாக குண்டுகளின் சுமையை தாங்க மாட்டாமல் சங்கிலி அறுந்து போனது...
மயிரிழையில் தப்பிவிட்டேன் !
நீ வென்றுவிட்டாய் டேவிட்.. இனி, கடைசி பரீட்சையையும் இப்போதே நடத்திவிடலாம் - நாம் இருவரும் பங்கு கொள்ளும் வகையில் இருக்கும் அது !


லாரன்ஸையும் டேவிட்டையும் அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றான் கிங் கோப்ரா..
அங்கே பார் ,
பயங்கரம்...!


நம் இருவரின் உடல் வலிமையையும் அந்த அமைப்பின் துணையோடு ஒப்பு நோக்கு செய்துவிடலாம் !
விபரீதமான பந்தயம்தான் !


நீ தோற்றுப் போனால் உன் தலையில் அந்த சட்டியிலுள்ள கொதிக்கும் உலோகக்கலவை அபிஷேகமாகக் கொட்டும் !


அந்த சட்டியின் நேர் கீழே நிறுத்தப்பட்ட டேவிட் விலகிச் சென்றுவிட இயலாதவாறு சங்கிலியால் பிணைத்தனர்..
ம்.. ஆரம்பி !


தன் பலம் அனைத்தையும் திரட்டி
டேவிட் சக்கரத்தை தன்பால் சுழலச்
செய்ய முயன்றார்... ஒரே ஒரு கையை
மட்டுமே பயன்படுத்தி அவருடைய
முயற்சி வெற்றியடையாவண்ணம் பார்த்துக்
கொண்டான் கிங் கோப்ரா.
நான் இரண்டு கைகளையும் பயன்படுத்த ஆரம்பிக்கும்போது நீ கடுமையாக பாடுபடவேண்டிவரும்.. பார்த்துக்கொள் !


சக்கரம் கொஞ்சம் கொஞ்சமாக
எதிர்ப்பக்கமாக சுழன்று கொண்டே
போனது...
இன்னும் கால் சுற்றுதான் பாக்கியிருக்கிறது... என் தோல்வி முழுமையடைய !


திடீரென்று ஒரு யோசனை மின்னலடித்தது அவருடைய மூளையில்...
மெள்ள பிடியை தளர்த்தி போக்குக் காட்டி சட்டென்று முழுப் பலத்தையும் பிரயோகிக்க வேண்டும்... இந்த அதிர்ச்சி வைத்தியம் ஒரு வேளை பலனளிக்கக்கூடும்!
டேவிட்டின் பிடி தளர்வதை உணர்ந்த கிங் கோப்ரா வெற்றிப் புன்னகை புரியலானான்.. ஆனால் மறுகணம் சட்டென்று முழுப் பலத்தையும் பிரயோகித்து டேவிட் சக்கரத்தை சுழற்றியபோது - அதை கொஞ்சமும் எதிர்பார்த்திராத கிங் கோப்ரா பிடியை விட்டுவிட்டான்...
குட்!
ஹா ஆஆ..!
உன்னை வென்று விட்டேன்..!


கிங் கோப்ரா அதிர்ந்து பின் வாங்கி நகர்ந்து கொண்ட அதே வேளையில் ஆயுதங்களை தயார்நிலையில் ஏந்தியவாறு முன்னுக்குப் பாய்ந்த அ. கொ. தீ. கழக காவலாளிகளின் தலைமீது கொட்டியது உருகிய நிலையிலிருந்த உலோகக்குழம்பு !
சண்டை போட்டுக் கொள்ளாமல் சமர்த்தாய் உங்களுக்குள் சரிபங்கு போட்டுக் கொள்ளுங்கள் !
ஆ.. செத்தேன் !
ஆஆ!


கால் கட்டை அறுத்துக் கொண்டு பாய்ந்தோடினார் டேவிட்..
ஸார்.. வாருங்கள் - ஓடிப் போய்விடலாம் இங்கிருந்து !
தன்னைக் காத்து நின்ற இரு காவலாளிகளுக்கும் மின்னல் வேகத்தில் அடி கொடுத்தார் லாரன்ஸ்.
ஓடு டேவிட் ! நானும் இதோ வந்துவிட்டேன் !
ஓடி வாருங்கள்.. இந்த வழியாக போய்விடலாம் !



அங்கே கிங்கோப்ரா ஆங்காரமாக கத்திக்கொண்டிருந்தான்.
அவர்கள் சுலபத்தில் தப்பியோடிவிடமுடியாது.. அவர்களுடைய முயற்சியை முறியடிக்க இந்த நிலவறையில் ஏற்கனவே பல ஏற்பாடுகள் செய்து வைத்திருக்கிறேன் !
பின்னால் ஆட்கள் தொடர்ந்து வரும் ஓசை கேட்டது.. மின்னல் வேகத்தில் பாய்ந்தோடினர் லாரன்ஸும் டேவிட்டும்...


அந்த கிராதகன் தன் பெயருக்கேற்ப நிஜ ராஜ நாகத்தையே நம்மீது ஏவி விட்டிருக்கிறான்.. பார் !
அதைத் தாண்டிக்கொண்டு செல்ல முடியாது போலிருக்கிறதே !
பக்கவாட்டு சுவரில் வரிசையாக வளையங்கள் பொருத்தப்பட்டிருந்தன
அந்த வளையங்களை பற்றிக் கொண்டு நகர்ந்து வெளியேறிவிடலாம்.. ஆனால் அது நமக்கு விரிக்கப்பட்ட வலையோ என்று சந்தேகம் தோன்றுகிறது!
இருக்கலாம்.. ஆனால் தப்பிக்க வேறு உபாயம் இல்லை என்ற நிலையில் சந்தேகத்தை உதறிஎறிந்துவிட்டு செயலில் இறங்க வேண்டியதுதான்!


ஆபத்தான அந்த முயற்சியில் அவர்கள் ஏறத்தாழ வெற்றியடைந்து விட்ட நிலையில்..
அதோ- விடாதீர்கள் அவர்களை !
சுட்டுத் தள்ளுங்கள்.. !
வேண்டாம்.. அவர்கள் செல்லட்டும் ! பண்டைக் காலத்தில் உள்ளே நுழையும் உளவாளிகளை திணறடிக்க இங்கே கையாளப்பட்ட சில யுக்திகளை திறம்படுத்தி தயார் நிலையில் வைத்துள்ளேன். நம் தோழர்கள் இருவரும் நேரே அங்கேதான் போய்ச் சேருவார்கள் !
உள்ளே ஒரே கும்மிருட்டு.. ! அங்கே என்ன ஆபத்து காத்துக் கொண்டிருக்கிறதோ ?

# அத்தியாயம் : 3 : இறுதி வெற்றி!




அவர்கள் பிரமிப்பில் செயலிழந்து நின்ற அந்தக் கணத்தில் கிங் கோப்ராவின் செய்தி தொடர்ந்தது..
இதோ இந்த பாதைதான் நீங்கள் பத்திரமாக வெளியேற உள்ள ஒரே வழி. இடையில் என்னென்ன தடைகள், வசதிகள் உள்ளன என்பதை பார்த்து புரிந்து கொள்ள உங்களுக்கு சரியாக இருபது வினாடி அவகாசம் கொடுக்கப்படும்.. பின்னர் இங்குள்ள விளக்குகள் மிக மங்கலாகிவிடும் !


சரியாக இருபது வினாடிகளுக்குப்பின் பிரகாசமான விளக்குகள் அனைத்தும் அணைந்துவிட்டன ஒரு சிறு விளக்கு மட்டும் மங்கலாக எரிந்துகொண்டிருந்தது.
எல்லாவற்றையும் பார்த்துத் தெரிந்து கொண்டுவிட்டீர்களா ஸார்..! இங்குள்ள ஆபத்துக்களை சமாளித்து தப்பிச் செல்வது என்பது சாத்தியமேயில்லாத காரியம்.. இதைவிட, திரும்பிச் சென்று அ. கொ. தீ. கழக ஆசாமிகளோடு மோதிப்பார்த்துவிடலாம் என்று தோன்றுகிறது எனக்கு !
அவசரப்படாதே டேவிட்..! இங்கிருந்து நாம் தப்பிவிட முடியும் என்று தோன்றுகிறது ! நீ மட்டும் நான் சொல்கிறபடி செய்..!
நீண்ட கழியின் வழியாக நட டேவிட்.. நானும் உன்னைப் பின் தொடர்ந்து வருகிறேன்..
சரி ஸார்..!


ஆனால்.. டேவிட் கழியின் மீது நடக்க முனைந்த போது -
கிரீஸ் தடவப்பட்டிருக்கிறது ஆ.. விழப்போகிறேன் !


வழுக்குகிறது.. பிடி நழுவுகிறது !
கைகளை பின்னிக் கொண்டு விடு டேவிட்.. கால்களையும் தான் !



லாரன்ஸின் அறிவுரைப்படி செய்த டேவிட் வசதியாக தன்னை நிலைப்படுத்திக் கொண்டார்... கீழே இரு சிங்கங்கள் உறுமிக் கொண்டு நின்றன.
நான் கீழே விழுவேன் என்று எதிர்பார்த்தன போலும் !
மெள்ள மெள்ள நகர்ந்து கழியின் முனைக்கு வந்து சேர்ந்தனர்.
ஒரு சிங்கம் என்றால் மோதிப்பார்த்துவிடலாம்.. ஒரே நேரத்தில் இரண்டைச் சமாளிப்பது கஷ்டம் !
அவற்றின் கவனத்தை நான் திசை திருப்புகிறேன்.. அப்போது நீ அடுத்த தடையை சென்றடைய முயற்சி எடுத்துக் கொள்.
எப்படி சமாளிக்க வேண்டும் என்பதை லாரன்ஸின் கம்ப்யூட்டர் மூளை ஏற்கனவே தீர்மானித்துவிட்டது.,!
பார்த்தாலே தெரிகிறது அந்த ஆண் சிங்கம் படுசோம்பேறி என்று பாய்ந்தால் பெண் சிங்கம்தான் நம்மீது பாயக் கூடும்..


ஹோய்.,
திடீரென்று ஒரு மனிதன் தனக்கு முன்னால் குதித்ததும் முதலில் திடுக்கிட்டுப் போன ஆண் சிங்கம் பின்னர் அரை மனதோடு எதிர்ப்பை தெரிவித்தது.
ஊஹூம்.. உனக்கு சுறுசுறுப்பு காணாது.. ! எங்கே என்னைப் பிடி பார்க்கலாம் !
சட்டென்று அந்த மதில் மீது குதித்த டேவிட், அதே வேகத்தில் பாய்ந்தார் - அடுத்த இலக்கை நோக்கி.,



மிகவும் ஆபத்தான அந்த முயற்சியில் வெற்றி பெற்று விட்டார் டேவிட்..
பின்னர் கொஞ்சம் கொஞ்சமாக சக்தியனைத்தையும் ஒன்று திரட்டி, முயன்று மேலே ஏறி அமர்ந்தார்.
குத்து ஈட்டிகளுக்கு மத்தியில் விழுந்திருந் தேனென்றால் இந்நேரம் என் ஆவி பிரிந்து விட்டிருக்கும்
அவர் வந்து சேர்ந்துகொள்ள வகை செய்ய வேண்டும்.. !
அப்போது பெண் சிங்கம் தன் துணையை இடித்துத் தள்ளிக் கொண்டு லாரன்ஸை நோக்கி முன்னேறியது.
ஆண் சிங்கம் விலகி வழிவிடுமா அல்லது தன் மறுப்பை தெரிவிக்குமா என்பதை பொறுத்துத்தானிருக்கிறது நான் தப்பிப்பிழைப்பது !



பெண் சிங்கத்தை நோக்கி தன் முன்னங் காலை வீசி தன் சினத்தைக் காட்டியது ஆண் சிங்கம்... அதைத் தொடர்ந்து இரண்டு சிங்கங்களும் ஒன்ருெடொன்று முறைத்துக் கொண்டு சண்டையிடத் தொடங்கின..
பார்த்தால் கணவன் – மனைவி சண்டை போல் இருக்கிறது.. இதுதான் நான் எதிர்பார்த்த சந்தர்ப்பம்...
நன்றி டேவிட்.
டேவிட் இருந்த திசையில் பாய்ந்தார் லாரன்ஸ்.. சுழலும் அந்த அமைப்பின் ஒரு நுனியை லாரன்ஸ் இருந்த திசையில் ஏற்கனவே நிலைப்படுத்தி வைத்திருந்தார் டேவிட்.


இருவரும் கீழே இறங்கி வந்தனர்.
ஈட்டிகளிடையே நடக்கத் தேவையான இடைவெளி மட்டுமே இருக்கிறது!
கொஞ்சம் கவனப் பிசகாக நடந்து கொண்டாலும் ஆபத்தாகிவிடும்!
மேலே ஏறிட்டு நோக்கியபோது சிவந்த, கொடூரமான விழிகள் இரு ஜோடி தென்பட்டன.
கரடிகளை சமாளிக்க ஒரு யுக்தி இருக்கிறது டேவிட்..


நான் மேலே ஏறிச் சென்று அவைகளை சந்திக்கப் போகிறேன் டேவிட்... !
தனியாகவா.. ? உங்களுக்கென்ன பைத்தியமா ?
இல்லை டேவிட் ! மற்ற கொடிய விலங்குகளைப் போலவே கரடிகளும் இறந்து கிடக்கும் பிராணிகளிடம் சற்று சந்தேகத்தோடும் அச்சத்தோடும் தான் நெருங்கும்.. மேலே போய், செத்துப் போனவனைப் போல் நடிக்கப் போகிறேன்
நாடகம் நிஜமாகிவிடாமலிந்தால் சரிதான் !
டேவிட் செய்ய வேண்டியது என்ன என்ற விபரங்களை எடுத்துரைத்த பின்னர் டேவிட் கரடிகளின் கவனத்தை ஈர்த்து திசைதிருப்பி வைத்துக் கொண்டிருந்த வேளையில் லாரன்ஸ் மேலே ஏறினார்..
எங்கே - என்னைப் பிடியுங்கள் பார்க்கலாம்.. ஹே.. ஹே !



லாரன்ஸ் மேலே ஏறியதும் கரடிகளின் கவனம் அவர் மீது திரும்பியது. அங்கிருந்து வெளியேற வகை செய்யும் படிக்கட்டு இருந்த இடத்திற்கு எதிர் திசையில் ஓடினார் லாரன்ஸ்..
என் யுக்தியை செயல் படுத்தும் தருணம் வந்து விட்டது...
திடீரென்று கூச்சலிட்டவாறு பின்னுக்குச் சரிந்தார் லாரன்ஸ்.
ஆஆ!
சக்தியனைத்தையும் திரட்டி எம்பிக் குதித்தார் டேவிட் !
அது டேவிட்டுக்கு கொடுக்கப்பட்ட சமிக்ஞையாகும் அவர் உடனே மேலே ஏறி படிக்கட்டு இருந்த திசையில் ஓடினார்
ஒரே பாய்ச்சலில் நான் முதல் படியை பற்றிக்கொண்டு விடவேண்டும்.. தவறினால் இரண்டாவது முயற்சியை மேற்கொள்ள வாய்ப்பே இல்லாமல் போய்விடும்!
பிடித்து விட்டேன்.. ! அவர் எப்படி கரடிகளை சமாளிக்கப் போகிறார் என்பது தான் மீதமுள்ள பிரச்னை !


செத்துப் போனவர் போல் சலனமில்லாமல் கிடந்தார் லாரன்ஸ்.. ஆராய்வது போல் மெள்ள இப்படியும் அப்படியுமாக அவரை புரட்டிப் பார்த்தன கரடிகள் - கண்களில் சந்தேகம் மிளிர.
ஒரு கண்ணை மட்டும் பாதி திறந்து டேவிட் மேலே ஏறிவிட்டாரா என்று பார்த்தார் லாரன்ஸ்..
வெரிகுட்... திட்டத்தில் ஒரு பாதி வெற்றியடைந்துவிட்டது.. இனி -
சட்டென்று பாய்ந்து எழுந்தார் லாரன்ஸ் - திடுக்கிட்டு போன கரடி மிரண்டு விலகியது.. லாரன்ஸ் ஓட்டம் பிடித்தார் !


கையை பற்றிக் கொள்ளுங்கள் ஸார்....!
லாரன்ஸின் வரவை ஒவ்வொரு கணமும் எதிர்பார்த்து கீழ்ப்படியில் உட்கார்ந்தவாறு கையை தொங்கப் போட்டுக் கொண்டு காத்திருந்த டேவிட் சுறுசுறுப்படைந்தார்.
மயிரிழையில் கரடிகளின் பிடியில் அகப்படாமல் தப்பித்துக் கொண்டுவிட்டார் லாரன்ஸ்.
வெற்றி..! வெற்றி...!
கரடிகளை சமாளித்தாயிற்று டேவிட்... இவைகளைவிட கொடூரமான கிங்கோப்ராவை சமாளிக்கும் பணி இன்னும் பாக்கியிருக்கிறது!


படிக்கட்டில் ஏறி அவர்கள் மேலே போய்ச் சேர்ந்தபோது, காலடியோசை கேட்கலாயிற்று.
வா...இப்படி இருள்சூழ்ந்த இந்த இடத்தில் ஒளிந்து கொண்டுவிடலாம்!


வந்தது-கிங்கோப்ராவே தான்!
லாரன்ஸும் டேவிட்டும் செத்துப் போய்விட்டார்களா அல்லது தப்பிக்க வழி தெரியாமல் இன்னமும் திணறித் தவித்துக் கொண்டிருக்கிறார்களா?


நாம் செத்துப் போய்விட்டதாக தீர்மானித்துவிட்டான் பயல்!
அவர்களுடைய சோக கதையை பார்க்க நமக்கு அவகாசமில்லை 'முக்கியமான விஷயம் பற்றி ஆலோசனை நடத்தவேண்டியிருக்கிறது!'
அவர்கள் அப்படி என்ன முக்கியமான விஷயம்பற்றி ஆலோசனை நடத்துகிறார்கள் என்று கேட்போம்!
கீழ்மட்ட மக்களிடமிருந்து வன்மையான எதிர்ப்பு கிளம்பியிருக்கிறது என்று சொல்கிறீர்கள். இல்லையா?
ஆமாம்.. இந்த நாட்டில் மட்டும் தான் என்றில்லை பொதுவாக எல்லா நாடுகளிலுமே நமக்கு எதிராக வன்முறையும் கிளர்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது...!


அவர்கள் பேசிக்கொண்டது அனைத்தும் தெளிவாகவே கேட்டது — வெளியே நின்று கொண்டிருந்த லாரன்ஸுக்கும் டேவிட்டுக்கும்!
குடிக்கத் தண்ணீர் கிடைக்கவில்லை என்பது அவர்களுடைய குற்றச்சாட்டு.. கடல் நீரை குடித்து வரும் எரிமலையின் வாயை மூட உடனே நீ உத்தரவிடாவிட்டால்—
ஊஹூம்... இன்னும் அதற்கு நேரம் வரவில்லை... இந்த கிங்கோப்ரா யார்—அவனுடைய செயல்திறன் எத்தகையது என்று உலகம் புரிந்து கொள்ள வேண்டும்!
இலண்டன் விமான நிலையத்தில், குண்டு வீசும் விமானம் ஒன்று எப்போதும் தயார் நிலையில் இருக்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறேன். நீங்கள் பயப்படுவதுபோல் நிலைமை கட்டுமீறிப் போனால் எரிமலையின் வாயை அடைக்க உடனே இலக்கை நோக்கிப் பறந்து குண்டு போட உத்தரவிடப்படும்!
மேஜை மீது மடித்து வைக்கபபடடிருந்த வரைபடம் ஒன்றை சுட்டிக் காட்டி பேசினான் கிங்கோப்ரா.
இந்த வரைபடத்தில் குறிக்கப்பட்டிருக்கும் இரகசிய இலக்கில் உள்ள அந்த எரிமலையின் வாயை எப்போது மூடவேண்டும் என்பது எனக்குத் தெரியும் -



அப்போது அங்கே இரு உருவங்கள் திடும் பிரவேசம் செய்தன..
டேவிட்.. விளக்குகளை அணை !
ஒரு நாற்காலியை எடுத்து மெழுகு வர்த்திகளை நோக்கி டேவிட் வீசியதும் அங்கே காரிருள் சூழ்ந்தது.. அதைத் தொடர்ந்து கூச்சலும் குழப்பமுமாக கிடந்தது.
லாரன்ஸூம் டேவிட்டும் சாகவில்லை.. பிடியுங்கள் - விடாதீர்கள் !
மறுவிநாடி - லாரன்ஸூம் டேவிட்டும் ஜன்னல் கண்ணாடியை நொறுக்கிக் கொண்டு வெளியே பாய்ந்தனர்..
படார்!


உடனே அபாய எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டது.. அ. கொ. தீ. கழக படைவீரர்கள் ஆயுதங்களை ஏந்தியவாறு தேடத் தொடங்கினர்..
எப்படியேனும் கண்டுபிடித்தாக வேண்டும் ! கண்ணில் பட்டதும் சுட்டுத் தள்ளுங்கள் அவர்களை !
ரொம்ப ஆபத்தான கட்டத்தில் இருக்கிறோம் !
பல்லாயிரக் கணக்கான ஜனங்களை வாழ்விக்கவேண்டுமானால் முதலில் நாம் பத்திரமாக இங்கிருந்து வெளியேற வேண்டும் !
தான் எடுத்து வந்த ஒரு கற்றை காகிதங்களை காட்டினார் லாரன்ஸ்.
அட்லாண்டிக் கடலில் நீர் மட்டத்துக்கு கீழே இருக்கும் எரிமலையின் இருப்பிடம் குறிப்பிடப்பட்டிருக்கும் வரைபடமா ஸார் !
ஆமாம.. விளக்கு அணைந்ததும் மேஜை மேலிருந்த இதை எடுத்துக் கொண்டுவிட்டேன் !
ரகசிய வரைபடக் குறிப்பு


திடீரென்று தங்களைக் குறி வைத்து தோட்டாக்கள் பாய்ந்து வந்ததை கண்ணுற்ற லாரன்ஸும் டேவிட்டும் தப்பியோட முயன்றனர்..
சுற்றடைப்பு வேலியை உடைத்துக் கொண்டுதான் வெளியேற வேண்டியிருக்கும்
டுமீல்!
டுமீல்!
டுமீல்!
அந்த வேலையை என்னிடம் விட்டுவிடுங்கள்
எத்தனையோ கடினமான சோதனைகளை எதிர்த்துச் சமாளித்துவிட்ட டேவிட்டுக்கு அந்த வேலி ஒரு பொருட்டே அல்ல..
ஹா ஆஆ..!


பிடுங்கி எடுத்த உலோகத் தடிகளை, தங்களை நோக்கி ஓடிவந்த அ. கொ. தீ. கழக ஆசாமிகள் மீது வீசினார்..
இதோ.. ! இருவரும் சமமாக பகிர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள்..
ஆ ஆ ஆ...
ஊப்ப்... !
லாரன்ஸும் டேவிட்டும் தப்பி யோடுவதைக் கண்ட கிங் கோப்ரா ஆங்காரமாக கூச்சலிட்டான்..
முட்டாள்களே கொண்டு வாருங்கள் ஒரு காரை ! அவர்களை துரத்திக் கொண்டு போகப் போகிறேன்.. !
கண்ணில் பட்ட முதல் காரை கிளப்பிக்கொண்டு விரைந்தனர் லாரன்ஸும் டேவிட்டும்..
இலண்டன் விமான நிலையத்திற்குப் போகிறோம்.. அங்கே கிங் கோப்ரா தயார் நிலையில் நிறுத்தி வைத்திருக்கும் விமானத்தை கிளப்பிக் கொண்டு அட்லாண்டிக் கடலில் எரிமலையின் வாய் இருக்கும் இலக்கை நோக்கி பறக்கிறோம். விமானத்திலுள்ள குண்டை போட்டு எரிமலையின் வாயை மூடி மனித சமுதாயத்தை அச்சுறுத்தி வரும் பிரச்னைக்கு நிரந்தரமாக ஒரு முடிவு கட்டுகிறோம் !


விமான நிலைய வேலியை மோதி தகர்த்துக்கொண்டு உள்ளே புகுந்தனர்.
விமானத்தை சுற்றி பலத்த காவல் இருக்கிறது ஸார் !
டமால்!
காவலாளிகளுக்கு என் ஆழ்ந்த அனுதாபங்களை இப்போதே சொல்லிக் கொண்டு விடுகிறேன் !


தங்களை நோக்கி சீறிக்கொண்டு வந்த காரைப் பார்த்ததும் விலகிச் சிதறி ஓடினர் காவலாளிகள்..
உயிரின் மீது ஆசையிருந்தால் கிட்டே நெருங்காதீர்கள் !
ஹாவ்.. வ் !


லாரன்ஸும் டேவிட்டும் விமானத்தை கிளப்பிக்கொண்டு புறப்பட்ட மறு நிமிடம் அங்கே வந்து சேர்ந்தான் கிங்கோப்ரா..
இன்னொரு யுத்த விமானத்தை கொண்டு வாருங்கள் இங்கே.. பின் தொடர்ந்து சென்று என் கைகளினாலேயே குண்டு வீசி அழிப்பேன் அவர்களை !


இரண்டு - இரண்டு - ஐந்து என்ற கோணத்தில் விமானத்தை உச்ச வேகத்தில் செலுத்து டேவிட்.. அ. கொ. தீ. கழகத்தினர் நம்மை பின் தொடர்ந்து வரக்கூடும்.


இன்னொரு யுத்த விமானத்தை அசுர வேகத்தில் செலுத்திக் கொண்டு பின் தொடர்ந்து வந்தான் கிங்கோப்ரா..
இரண்டு விமானங்களுக்கும் இடையே இடைவெளி குறைந்து கொண்டே வந்தது..
சைத்தான்கள்..! உலகத்தை அடிமைப்படுத்தும் என் திட்டம் வெற்றியடையப் போகும் வேளையில் இடைஞ்சலாக முளைத்திருக்கும் அவர்களுடைய முயற்சியை முறியடித்தே தீருவேன்!
இலக்கை சென்றடைய இன்னும் சரியாக இரண்டு நிமிடம் முப்பது வினாடி பயணமே பாக்கியிருக்கிறது..!
ஆனால் அவர்கள் இலக்கை நெருங்கிவிட்டபோது கிங்கோப்ரா அவர்களை நோக்கி சுட்டான்..
பட்!
பட்! பட்!


அந்த தாக்குதலால் வெடித்துச் சிதறிய உலோக துண்டங்கள் தன்னை பலமாக தாக்கியபோதிலும டேவிட் கருமமே கண்ணாக தொடர்ந்து விமானத்தை செலுத்திக் கொண்டு போனார்..
ஐந்து - நான்கு - மூன்று - இரண்டு - ஒன்று...!
இதோ - குண்டு வெளியேறிவிட்டது !
FIRE
கனமான ஹைட்ரஜன் குண்டு ஒன்று பாரசூட்டின் உதவியோடு அட்லாண்டிக் கடலில் இலக்கை நோக்கி இறங்கியது..
பணி முடிந்துவிட்டது.. இனி நாம் விமானத்தில் பற்றிக் கொண்டு விட்ட தீயை அணைக்க முயற்சியை மேற்கொள்வோம் !


கடல் நீரை தொடர்ந்து குடித்து வந்த எரிமலையின் வாய் பகுதியை நோக்கி கீழிறங்கியது ஹைட்ரஜன் குண்டு..


தன்னுடைய நாசவேலை முறியடிக்கப் பட்டுவிட்டதை கண்ணுற்ற கிங்கோப்ரா வெறிபிடித்தவன் போலானான்..
உங்களை அழிக்காமல் விடமாட்டேன்..!


லாரன்ஸும் டேவிட்டும் இருந்த விமானத்தின் மீது மீண்டும் குண்டுகளைப் பொழிந்தான் கிங்கோப்ரா..
டுமீல்!
வலப்பக்க எஞ்சினில் தீப்பற்றிக் கொண்டு விட்டது சார்...!


மறுவினாடி - இலக்கை தொட்டதும் ஹைட்ரஜன் குண்டு வெடித்தது
டம்! டமால்!


அதனால் காற்றுவெளியில் ஏற் பட்ட கொந்தளிப்பினால் அலைக்கழிக்கப்பட்ட இரு விமானங்களும் நிலை குலைந்து, கட்டுப்பாடிழந்து வீழ்ந்தன...
நீரில் மூழ்கி கீழே கீழே போய்க் கொண்டிருந்த நிலையில் லாரன்ஸின் நெஞ்சில் வடிவம் பெற்ற இறுதி எண்ணவோட்டம் என்ன தெரியுமா?-
எங்கள் முயற்சி வெற்றி பெற்றதா ?... குண்டு வெடித்து எரிமலையின் வாய் சரிவர மூடப்பட்டதா - மனித சமுதாயம் சதிகாரர்களின் வெறியாட்டத்திலிருந்து தப்பித்ததா.. ?




சில தினங்களுக்குப் பின் - ஓர் அமெரிக்க மருத்துவமனையில் லாரன்ஸும் டேவிட்டும் சுயவுணர்வு திரும்ப வரப் பெற்றனர்..
அசகாய சூரத்தனம் செய்து சரித்திரம் படைத்துவிட்டீர்கள் நீங்களிருவரும் !
சென்ற வாரம் பெய்த பெரு மழையால் உலகின் எல்லா பாகங்களிலும் நீர் மட்டம் குறிப்பிடத்தகுந்த அளவில் உயர்ந்து விட்டிருக்கிறது!
கிங் கோப்ராவின் கதை முடிந்துவிட்டதால், மன உறுதியோடு அ. கொ. தீ. கழகத்தினருக்கு எதிராக போர்க்கொடி உயர்த்தி அதில் வெற்றியும் பெற்று வருகிறார்கள் பொதுமக்கள்..
நாம் வென்று விட்டோம் ஸார்.. !
ஆனால் - கிங் கோப்ரா.. ?
ஹைட்ரஜன் குண்டு வெடித்த பின் நாம் அவனை பார்க்கவேயில்லை. செத்துப் போனானா அல்லது நாம் காப்பாற்றப்பட்டது போல் அவனும் தெய்வாதீனமாக உயிர் பிழைத்து எங்காவது ஓடிப் போயிருப்பானா.. உறுதியாக சொல்ல முடியவில்லை !









லயன் காமிக்ஸ் சார்பாக வெளியிடுபவரும், ஆசிரியரும் :
S. விஜயன், முகவரி: லயன் காமிக்ஸ், த. பெ. 55,
சிவகாசி - 626 123. போன்: 1159. வெளியீடு எண்: 14
அச்சிட்டோர் : முத்து ஃபைன் ஆர்ட் பப்ளிகேஷன்ஸ்,
சிவகாசி.




லயன் காமிக்ஸ்

உங்கள் அபிமான கதாநாயகர்கள் வழங்கும் அற்புத சித்திரக் கதை விருந்து!

# ஆண்டு மலர்!

196 பக்கங்கள்

விலை ரூ. 3/-

பாக்கெட் சைஸ்!

இந்த இதழுடன் ஸ்பைடர், ஆர்ச்சி ஸ்டிக்கர் இலவசம்!



# "பழிவாங்கும் பொம்மை" விமர்சனம்!

ஸ்பைடர் பிரியர்களே!

"பழிவாங்கும் பொம்மை" சித்திரக் கதையை படித்து விட்டு, நீங்கள் எல்லோரும் சரமாரியாய் எழுதித் தள்ளிய கடிதங்கள் கிடைத்தன. நன்றி! நன்றி! நன்றி! உங்கள் வர்ணனைகளும், கருத்தான விமர்சனங்களும், உண்மையிலேயே குற்றவியல் சக்கரவர்த்தி ஸ்பைடருக்கு பெருமை சேர்ப்பதாக உள்ளன! ஆனால் இதில் ஒரு வேடிக்கை விஷயமென்னவென்றால், ஸ்பைடரைப் பாராட்டிப் புகழ்ந்துவரும் கடிதங்களுக்கு இணையாக, ஆர்டினியைப் பற்றிய விமர்சனங்களும் வந்தவண்ணம் உள்ளன! ஸ்பைடரின் கூட்டாளிக்கு அதுவும் ஒரு உதவாக்கரைப் பயலுக்கு இத்தனை மௌசா?! ஆச்சரியம் தான்!

ரூ 25-/. பரிசைப் பெற்றுச் செல்லும் அதிர்ஷ்டசாலி:-

திரு. P. பாலசுப்பிரமணியன்,
37 - A, ஆலமரத் தெரு, கரூர்-1.

அவரது விமர்சனம் :

வில்லனைப் பற்றி :

ஸ்பைடருக்கு உள்ள வரவேற்பு அவனை எதிர்க்கும் வில்லனுக்கும் உண்டு! காரணம் ஸ்பைடரை குற்றங்கள் நிகழ்த்த விடாமல், அவனை திசை திருப்பி விடுவதே இந்த வில்லன்தான். "பொம்மை" வில்லன் உண்மையிலேயே பயங்கரமானவன்தான்! வெள்ளை மாளிகையையே உருக வைக்கும் பயங்கரமும், ஸ்பைடரைப் புரட்டி அடிக்கும் துணிவும், அழிவு சூலாயுதத்தின் அட்டகாசமும்......அப்பப்பா!

பிடித்த கட்டம் :

ஸ்பைடரின் சாகஸங்கள் அருமைதான் என்றாலும், போலி சூலாயுதத்தை அசல் என்று நினைத்து, ஹோட்டலில் ஆர்டினி அடிக்கும் கேலிக்கூத்தும், வளர்த்த கடா மார்பில் பாய்வது போல தன் ஊழியனே தனக்கு எதிராகத் திரும்பியும் கூட "என்ன செய்வது மனசு கேட்கவில்லை" என்று தனக்குள் கூறிக்கொண்டு ஸ்பைடர் தன் சகாவை மீட்கும் கட்டமும் என் நெஞ்சை விட்டு நீங்காது!

**இடநெருக்கடி காரணமாய் வாசகர் கடிதங்களை பிரசுரிக்க இயலவில்லை. மன்னிக்க வேண்டுகிறோம்!**

- ஆர் .



வெகு விரைவில்
திகில்!
புதுமை மாத இதழ்!
உங்களை மயிர்க்கூச்செறிய வைக்கப் போகிறது!
ஜாக்கிரதை!
வெளியிடுவோர்:
பிரகாஷ் பப்ளிஷர்ஸ்
த.பெ.374. சிவகாசி-626123.


லயன்
காமிக்ஸ்
ரூ.
2/-